2023 மார்ச் 24]

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களுடைய தலைமையில் அமைந்ததற்குப் பிறகு, தமிழ்நாடு முழுவதும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திட வேண்டுமென்பதற்காக, கடந்த நிதியாண்டில் 5 சிட்கோ தொழிற்பேட்டைகளை அமைத்து, இன்றைக்கு அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வருகின்ற காலங்களில், பின்தங்கிய பகுதிகளில், எந்தெந்த பகுதிகளில் இந்த சிறு தொழில்கள் வளர வேண்டுமென்பதை எண்ணி, அந்தந்த பகுதிகளில் அமைக்க இருக்கிறோம். சில இடங்களில், குறிப்பாக, ஸ்ரீபெரும்புதூர் பகுதிகளில் பார்த்தீர்களென்றால், அரசு இடங்கள் இல்லை. பல பகுதிகளில் சிறு தொழில்கள் அதிகமாக வளர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில், தனியார் நிலங்களைப் பெறுவதற்கான முயற்சிகளை அரசின் மூலமாக நாங்கள் செய்து வருகிறோம். ஆக, எந்தெந்த பகுதிகளில் இந்த* MSME *தொழில் நிறுவனங்கள் அமைக்க வேண்டுமோ, அந்தந்த பகுதிகளில் நிச்சயமாக அரசு நிலம் இருந்தால் அதைக் கையகப்படுத்தி அமைத்துத் தருவோம். முக்கியமாக அங்கு தொழில் நிறுவனங்கள் வர வேண்டுமென்று விருப்பப்பட்டால், அந்தந்தப் பகுதிகளில் தேவைப்பட்டால் தனியார் இடங்களை விலைக்கு வாங்கிப் பெற்று, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை நிச்சயமாக நம்முடைய அரசு அமைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ராஜகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

புதைவடங்கள்

***1654—திரு. S. ராஜகுமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நகரப் பகுதியில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை நகரப் பகுதியில், தரைமேல் கம்பங்கள் வழியாகச் செல்லும் மின் கம்பிகளை, பூமிக்கடியில் புதைவடங்களாக அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் மற்றும் சுனாமி போன்ற பல்வேறு இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கக்கூடிய மாவட்டமாக இது இருக்கிறது. அடிக்கடி இதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பொதுவாக, அரசால், மாநகராட்சிகளில் இதுபோன்று புதைவடங்கள் வழியாக மின்னிணைப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. அதை நகராட்சிகளிலும் செயல்படுத்துகிற ஒரு திட்டத்தை அரசு வகுத்தால், பல்வேறு வகையிலே சிரமங்கள் குறையும். உதாரணமாக, போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடிய மரங்களை மாற்றுவதாக இருக்கட்டும் அல்லது சாலைகளை அகலப்படுத்துகின்ற நேரங்களில் மரங்களை மாற்றுவதாக இருக்கட்டும். அந்த மரங்களை மாற்றி அமைப்பதால் அதிக சிரமத்தையும் செலவையும் குறைக்கலாம். ஆகவே, இதுபோன்ற திட்டங்களை அரசு செயல்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக, சென்னை மாநகராட்சியினுடைய அனைத்துப் பகுதிகளிலும், மின்கம்பிகளைப் புதைவடங்களாக அமைக்கக்கூடிய பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் உத்தரவின் அடிப்படையில், பெரம்பூர் மற்றும் ஆவடி கோட்டங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தாம்பரம் மற்றும் அடையாறு கோட்டங்களில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், கூடுதலாக 7 கோட்டங்களுக்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இந்தப் பணிகள் நிறைவு பெற்றபிறகு, முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு தங்கள் வாயிலாக நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.*

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தஞ்சை மாநகரத்தில், இராஜவீதிகளில் மிகப் பழமையான மின்கம்பிகள் பயன்பாட்டில் இருக்கின்றன. அவற்றைப் பூமிக்கடியில் கொண்டு செல்ல வேண்டுமென்று நீண்டநாட்களாக கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அறிவித்தார்கள். அதை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வந்து, அந்தப் பகுதிகளிலே, பெரியகோயிலின் தேர் செல்லக்கூடிய பாதையான இராஜவீதிகளில் புதைவடங்களை அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, ஏற்கெனவே 4 திருக்கோயில்களுக்கு*

மின்கம்பிகளைப் புதைவடங்களாக அமைக்கக்கூடிய பணிகள் அறிவிக்கப்பட்டு, அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிருவாக அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், அதை விரைந்து முடிப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மின்கம்பிகளுக்கு மாற்றாக கேபிள் மூலமாக, பல்வேறு மாற்றங்களைச் செய்து வருகிறீர்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் 2007 ஆம் ஆண்டு ஒரு விபத்து ஏற்பட்டு 4 உயிர்கள் பலியாகியிருக்கின்றன. மேலே செல்லும் அந்த மின்கம்பிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அதுபோன்று, என்னுடைய ஊரில் அம்மன்கோயில் அருகில் பழுதடைந்த டிரான்ஸ்பார்மர் மூலமாக விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதையும் மாற்றித் தாருங்கள் என்று வேண்டுகோள் வைத்தேன்.

குறிப்பாக, தஞ்சையில் ஏற்பட்ட விபத்திற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் அங்கு சென்று, அதை மறுசீரமைப்பதற்குப் பதிலாக, தேர்த் திருவிழாக்கள் நடைபெறுகின்ற வீதிகள், அதுபோன்று சர்ச்சுகளின் தேர்கள் செல்கின்ற வீதிகளை கணக்கெடுத்து, அந்தப் பாதைகளில் உள்ள கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றுவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் விரிவான திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நான் குறிப்பிட்ட என்னுடைய தொகுதியின் இரண்டு கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றித் தருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 மார்ச் 24]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில் தேரோடும் வீதிகளில் இருக்கக்கூடிய மின்கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைக்க வேண்டும் என்பதைத் துறை ரீதியாக ஆய்வுசெய்து, அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். அதனடிப்படையில், ஏற்கெனவே, நான்கு திருக்கோயில்களுக்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற கோயில்களில், முன்னுரிமை அடிப்படையில், எந்தெந்த கோயில்களில் 'மிக அவசரம்' என்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலை வழங்கியிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். அவர் ஏற்கெனவே சொல்லியிருக்கின்ற தொகுதி சார்ந்த கோரிக்கைகளுக்கு துறை ரீதியாக அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணிகளும் நிறைவு செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

எக்ஸ்ரே மற்றும் சி.டி. ஸ்கேன் வசதி

***5296—திரு. இ.மா. மான்ராஜ்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் மருத்துவமனையில் நவீன எக்ஸ்ரே மற்றும் சி.டி. ஸ்கேன் வசதிகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனை, தினந்தோறும் 1,350 புறநோயாளிகளையும்,